Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 226 | உள்ளூர் - 14.08.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 226 | வெளியூர் - 15.08.2026 | சனிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

6 லக்னங்களுக்கு ராஜயோகம்!

இளைஞர்களுக்கு சூப்பர் வேலை வாய்ப்பு!

கரூர் வழக்கில் அரசுக்கு குட் நியூஸ்!

ஓலா, ஊபர், ரேபிடோவுக்கு கிடுக்கிப்பிடி!

## தமிழ்நாட்டின் 3 காவல் அதிகாரிகளுக்கு குடியரசுத் தலைவர் பதக்கம்!



புதுடெல்லி, ஆக. 14–

சுதந்திர தினத்தை முன்னிட்டு குடியரசுத் தலைவர் விருது உள்ளிட்டவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்புப் படை, காவல்துறை மற்றும் தீயணைப்புப் படைகளைச் சேர்ந்தவர்களின் பட்டியலை மத்திய உள்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதும் குடியரசுத் தலைவரின் தகைசால் பணிக்கான பதக்கத்துக்கு 92 பேரும், வீரதீரச் செயலுக்கான பதக்கத்துக்கு 301 பேரும், உள்துறை அமைச்சகத்தின் சிறந்த பணிக்கான பதக்கத்துக்கு 664 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் இருந்து குடியரசுத் தலைவர் தகைசால் பணிக்கான பதக்கத்துக்கு 3 பேரும், உள்துறை அமைச்சகத்தின் சிறந்த பணிக்கான பதக்கத்துக்கு 17 பேரும் தேர்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**குடியரசுத் தலைவர் பதக்கம்**

ஜே. விஜய் ஆனந்த், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தமிழ்நாடு

கே. ராமச்சந்திரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தமிழ்நாடு

எஸ். குமார், உதவி கமாண்டன்ட், தமிழ்நாடு

**சிறந்த பணிக்கான பதக்கம்**

எஸ் மாலதி, காவல் ஆய்வாளர், தமிழ்நாடு

எஸ் பாஸ்கர், காவல் உதவி ஆய்வாளர், தமிழ்நாடு

கே சிவசங்கர், கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர், தமிழ்நாடு

எம் சோமசுந்தரம், கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர், தமிழ்நாடு

பி கோவிந்தராஜு, கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர், தமிழ்நாடு

எஸ் சண்முகம், காவல்துறை துணை கண்காணிப்பாளர், தமிழ்நாடு

ஜி பத்தருன்னிசா பேகம், காவல் ஆய்வாளர், தமிழ்நாடு

சி மதிமாறன், காவல் ஆய்வாளர், தமிழ்நாடு

கே சரஸ்வதி, காவல் ஆய்வாளர், தமிழ்நாடு

பி மாரியப்பன், காவல் ஆய்வாளர், தமிழ்நாடு

எஸ் லட்சுமி, காவல் ஆய்வாளர், தமிழ்நாடு

ஜெயா இளவரசி, காவல் ஆய்வாளர், தமிழ்நாடு

கே கோபால், காவல் ஆய்வாளர், தமிழ்நாடு

எஸ் மணிமாறன், உதவி கமாண்டன்ட், தமிழ்நாடு

சி லட்சுமி, காவல் ஆய்வாளர், தமிழ்நாடு

ஆர் செந்தில்குமார், காவல் உதவி ஆய்வாளர், தமிழ்நாடு

என் சதுரகிரி, காவல் உதவி ஆய்வாளர், தமிழ்நாடு

## மாமல்லபுரத்தில் கூடும் தென்னிந்திய முதல்வர்கள்!




புதுடெல்லி, ஆக. 14–

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் 31–வது தென் மண்டல கவுன்சில் கூட்டம் ஆகஸ்ட் 19, 20–ம் தேதிகளில் தமிழகத்தில் நடைபெற உள்ளது. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா மாநில முதல்வர்கள் மற்றும் புதுச்சேரி முதல்வர் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மாநிலங்களுக்கு இடையேயான பிரச்னைகள், வளர்ச்சித் திட்டங்கள், பாதுகாப்பு, மத்தியமாநில உறவு உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடைபெற உள்ளது.

## "ராகுலின் பேச்சு ஆணவத்தின் உச்சம்!" அனுராக்!




சிம்லா, ஆக. 14–

பிரதமர் நரேந்திர மோடியின் வெளியுறவுக் கொள்கை மற்றும் செயல்பாடுகளை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கடுமையாக விமர்சித்திருந்த நிலையில், அதற்கு பாஜக எம்.பி. அனுராக் தாகூர் கடும் பதிலடி கொடுத்துள்ளார்.


ராகுல் காந்தியின் பேச்சு அநாகரிகமும் ஆணவமும் நிறைந்ததாக உள்ளது என்றும், அது காங்கிரஸ் கட்சியின் மனநிலையை வெளிப்படுத்துவதாகவும் அனுராக் தாகூர் விமர்சித்தார்.

மேலும், ராகுல் காந்தி மக்களால் மூன்று முறை நிராகரிக்கப்பட்டவர் என்றும், தற்போது பிரதமர் குறித்து அவதூறு பரப்பும் வகையில் கருத்துகளை தெரிவித்து வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

வெளிநாட்டு பெண் தலைவர் தொடர்பாக ராகுல் காந்தி தெரிவித்த கருத்துகளையும் அனுராக் தாகூர் விமர்சித்தார். இதுபோன்ற கருத்துகளை தெரிவிக்கும் முன்பு அதன் தாக்கம் குறித்து சிந்திக்க வேண்டும் என்றும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ராகுல் காந்தி தனது பொறுப்பை முறையாக நிறைவேற்றவில்லை என்றும் அனுராக் தாகூர் குற்றம்சாட்டினார். முக்கிய விவகாரங்களில் ஆக்கப்பூர்வமான விவாதம் நடத்துவதற்கு பதிலாக, அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

## கரூர் வழக்கில் அரசுக்கு குட் நியூஸ்!



சென்னை, ஆக. 14–

கரூர் பிரசார கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு வழங்கிய அரசுப் பணி நியமனத்தை ரத்து செய்த உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்துள்ளது.

அரசின் பணி நியமனத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்றம், நியமனத்தை ரத்து செய்திருந்தது. இதனை எதிர்த்து தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இன்று ( 14.08.2026) நடைபெற்ற விசாரணையில், உயர் நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்த உச்சநீதிமன்றம், "அரசின் கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிட முடியுமா? கருணை அடிப்படையில் பணி வழங்கக்கூடாது என்று கூற நீங்கள் யார்?" என கேள்வி எழுப்பியது. இதனால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட அரசு வேலை தொடர்பான தமிழக அரசின் முடிவுக்கு தற்போது தற்காலிக நிம்மதி கிடைத்துள்ளது.

## விண்வெளி கழிவில் இந்தியா புதிய சாதனை!




விண்வெளி கழிவுகளை கட்டுப்படுத்தும் முயற்சியில் இந்தியா புதிய சாதனை படைத்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 2–ல் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்.வி.எம்.–3 எம்5 ராக்கெட் மூலம் சி.எம்.எஸ்–3 செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது. செயற்கைக்கோள் பிரிக்கப்பட்ட பிறகு, ராக்கெட்டின் மேல்பகுதி விண்வெளியில் சுற்றி வந்தது. இதனை இஸ்ரோ தொடர்ந்து கண்காணித்து வந்தது.

படிப்படியாக பூமியை நோக்கி வந்த ராக்கெட்டின் பெரும்பாலான பாகங்கள் வளிமண்டல உராய்வால் எரிந்தன. மீதமிருந்த பாகங்கள் ஜூலை 30–ல் அட்லாண்டிக் பெருங்கடலில் விழுந்ததை இஸ்ரோ உறுதி செய்தது. பொதுவாக ராக்கெட் பாகங்கள் பல ஆண்டுகள் விண்வெளிக் கழிவுகளாக சுற்றி, செயற்கைக்கோள்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். ஆனால், திட்டமிட்ட நடவடிக்கையால் வெறும் 9 மாதங்களில் ராக்கெட் பாகத்தை பூமிக்குத் திருப்பி, விண்வெளிக் கழிவை குறைப்பதில் இந்தியா சாதனை படைத்துள்ளது.

## வீட்டுத் தங்கத்துக்கு அரசின் குறி!

# 30,000 டன் தங்கம்... நகைக் கடைகளும் களமிறங்கும்

## 'கோல்ட் 2.0'!




புதுடெல்லி, ஆக. 14–

இந்திய மக்களிடம் வீடுகள், வங்கி லாக்கர்கள், கோயில்கள் உள்ளிட்ட இடங்களில் சுமார் 30,000 டன் தங்கம்இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இதன் மதிப்பு சுமார் 5 டிரில்லியன் டாலர் என கூறப்படும் நிலையில், பயன்படுத்தப்படாமல் இருக்கும் இந்த தங்கத்தை பொருளாதாரச் சுழற்சிக்குள் கொண்டு வர மத்திய அரசு 'கோல்ட் மானிடைசேஷன் 2.0' திட்டத்தை முன்னெடுத்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் தங்கத் தேவையை பூர்த்தி செய்ய ஆண்டுதோறும் சுமார் 700 முதல் 900 டன் தங்கம் இறக்குமதிசெய்யப்படுகிறது. இதனால் நாட்டின் அந்நியச் செலாவணியில் பெரும் தொகை வெளியேறுகிறது. 2026 நிதியாண்டில் மட்டும் தங்க இறக்குமதிக்காக சுமார் 71 பில்லியன் டாலர் செலவிடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் உருவாக்கப்பட்ட முந்தைய கோல்ட் மானிடைசேஷன் திட்டம், எதிர்பார்த்த அளவுக்கு மக்களை ஈர்க்கவில்லை. 2015–ல் அறிமுகமான திட்டத்தில் மக்கள் தங்களிடம் உள்ள தங்கத்தை வங்கிகளில் ஒப்படைத்து, அதன் தூய்மை மற்றும் எடைக்கு ஏற்ப தங்க வைப்பாக மாற்றிக் கொள்ள முடிந்தது. இதற்கு குறிப்பிட்ட காலத்திற்கு வட்டி வருமானமும் வழங்கப்பட்டது.

ஆனால், அந்தத் திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் வெறும் 5,700 டெப்பாசிட்டர்கள், சுமார் 31 டன் தங்கம் மட்டுமே திரட்டப்பட்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில், புதிய கோல்ட் மானிடைசேஷன் 2.0 திட்டத்தில் முக்கிய மாற்றம் செய்யப்பட உள்ளது. வங்கிகளுடன் சேர்த்து நகைக் கடைகளையும் திட்டத்தில் இணைத்து, பொதுமக்களிடம் இருந்து தங்கத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு உருவாக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் தங்கத்தை நகை உற்பத்தியில் பயன்படுத்தி மீண்டும் சந்தைக்குக் கொண்டு வருவதன் மூலம், தங்க இறக்குமதியை குறைத்து உள்நாட்டு தங்கச் சுழற்சியை அதிகரிப்பதே திட்டத்தின் முக்கிய நோக்கமாக பார்க்கப்படுகிறது.

நகைக் கடைகளுக்கு கூடுதலாக 1 சதவீதம் லாபம் கிடைக்கும் வகையில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதனால் நகை விற்பனையாளர்கள் மத்தியில் திட்டத்திற்கு ஆர்வம் அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் தங்களிடம் உள்ள தங்கத்தை பாதுகாப்பாக முதலீடாக மாற்ற முடியுமா, அதற்கான பலன்கள் என்ன என்பதே இந்த புதிய திட்டத்தின் முக்கிய கேள்வியாக உள்ளது.

## வங்கதேச அதிபர் தேர்தல்: வேட்பாளர் அறிவிப்பு!



டாக்கா, ஆக. 14–

வங்கதேசத்தில் ஆளும் வங்கதேச தேசியவாதக் கட்சியின் (பிஎன்பி) பொதுச் செயலாளர் மிர்சா ஃபக்ருல் இஸ்லாம் ஆலம்கீர் அதிபர் பதவிக்கான வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

வங்கதேச அதிபர் தேர்தல் வரும் 20–ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 78 வயதான மூத்த அரசியல்வாதியான ஆலம்கீர், அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பிஎன்பி பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும், கட்சியின் உயர்மட்ட கொள்கை முடிவெடுக்கும் நிலைக் குழுவிலிருந்தும் விலகினார் என்று அக்கட்சியின் மூத்த இணைப் பொதுச் செயலாளர் ருஹுல் கபீர் ரிஸ்வி தெரிவித்தார்.

## ஆடிப்பூர விழா... ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் நாச்சியார் தேரோட்டம் கோலாகலம்...



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் நடைபெற்று வரும் ஆடிப்பூர திருவிழாவின் சிகர நிகழ்வான தேரோட்டம் இன்று விமரிசையாக நடைபெற்றது....

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 14.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 29-ம் தேதி

# தமிழகத்தில் முதலீட்டு மெகா வேட்டை!




முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக அரசு நடத்திய 'வெற்றி தமிழ்நாடு' முதலீட்டாளர்கள் மாநாட்டில், 97 நிறுவனங்களுடன் ₹67,452 கோடி மதிப்பிலான முதலீட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதன் மூலம் 1,06,998 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக, ஒப்பந்தம் செய்த 97 நிறுவனங்களில் 25 நிறுவனங்கள் முதன்முறையாக தமிழகத்தில் முதலீடு செய்கின்றன. கடந்த 100 நாட்களில் தமிழக அரசு சுமார் ₹1 லட்சம் கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் தூத்துக்குடி ₹10,000 கோடி முதலீட்டை ஈர்த்துள்ளது. Lighthouse Green Datacenter அங்கு ஹைப்ரிட் ஹைப்பர்ஸ்கேல் டேட்டா சென்டர் அமைக்க உள்ளது.

காஞ்சிபுரம் ஒரகடம் பகுதிக்கு சுமார் ₹11,968 கோடி முதலீடு கிடைத்துள்ளது. JK Tyre, Daimler, Saint–Gobain உள்ளிட்ட நிறுவனங்கள் ஆட்டோமொபைல், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் முதலீடு செய்ய உள்ளன.

சென்னையில் SuperMicro Computers, Avalon Technologies உள்ளிட்ட நிறுவனங்கள் AI சர்வர்கள், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் டேட்டா சென்டர் துறைகளில் முதலீடு செய்ய உள்ளன.

ஓசூரில் ₹700 கோடியில் Ultraviolette Automotive புதிய தொழிற்சாலை, Titan Engineering விரிவாக்கம் உள்ளிட்ட திட்டங்களும் வர உள்ளன.

திருவள்ளூரில் YKK நிறுவனம் ₹1,651 கோடியில் மிகப்பெரிய ஜிப்பர் உற்பத்தி ஆலையை அமைக்க உள்ளது. இதன் மூலம் 4,300 வேலைவாய்ப்புகள் உருவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் PM MITRA ஜவுளிப் பூங்காவில் ₹1,675 கோடி முதலீடும், வேலூரில் காலணி உற்பத்திக்கு ₹240 கோடி முதலீடும் வர உள்ளது.

தொழில்துறை, ஆட்டோமொபைல், AI, டேட்டா சென்டர், விண்வெளி, ஜவுளி, மருத்துவம் என பல்வேறு துறைகளில் ஒரே நேரத்தில் குவியும் இந்த முதலீடுகள், தமிழகத்தின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வளர்ச்சியில் புதிய வேகத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அண்ணாமலையின் அரசியல் மவுனத்தால் மீண்டும் பா.ஜ.,வுக்கு திரும்பிய நிர்வாகிகள்!



சென்னை, ஆக. 14–

அண்ணாமலை தலைமையிலான, 'வீ தி லீடர்ஸ்' அமைப்பில் இணைந்தவர்கள், மீண்டும் பா.ஜ.,வுக்கு திரும்ப தொடங்கி உள்ளனர்.

தமிழக பா.ஜ., தலைவராக இருந்த அண்ணாமலை, தனது அதிரடி செயல்பாடுகளால், தனக்கென பா.ஜ.,விலும், கட்சிக்கு வெளியிலும், ஆதரவாளர்களை உருவாக்கினார். பா.ஜ.,வில் ஏற்பட்ட மனக்கசப்பால், சட்டசபை தேர்தலுக்குப் பின், அக்கட்சியில் இருந்து விலகி, 'வீ தி லீடர்ஸ்' எனும் அமைப்பை தொடங்கினார்.

அவர் மீதிருந்த பற்றில், தமிழக பா.ஜ.,வில் இருந்து, ஏராளமான நிர்வாகிகள் வெளியேறி, அவரது அமைப்பில் இணைந்தனர். ஆனால், பா.ஜ.,வில் இருந்தபோது மேற்கொண்ட அதிரடி அரசியலில் இருந்து அண்ணாமலை விலகி, தற்போது அமைதியாக அரசியல் செய்து வருகிறார்.

மேலும், தன்னுடன் வந்தவர்களுக்கு, எந்த பொறுப்பையும் வழங்காமல் உள்ளார். இதனால் அதிருப்தி அடைந்தவர்கள், மீண்டும் பா.ஜ.,வுக்கு திரும்ப தொடங்கி உள்ளனர். அந்த வகையில், பா.ஜ.,வில் இருந்து 'வீ தி லீடர்ஸ்' அமைப்பில் இணைந்த, திருநெல்வேலி மாவட்ட பா.ஜ., – ஓ.பி.சி., அணி முன்னாள் செயலர் வெங்கடேஷ், 'புரோட்டாகால்' பிரிவு முன்னாள் மாவட்ட செயலர்கள் பேச்சிமுத்து, கோவிந்தராஜன், முன்னாள் கிளை தலைவர் ராஜி உள்ளிட்டோர், நேற்று திருநெல்வேலியில், தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் முன்னிலையில், மீண்டும் பா.ஜ.,வில் இணைந்தனர்.

# மே 2025-ஐ விட பலமாக பதிலடி கொடுப்போம் - தண்ணீர் விடாத இந்தியாவுக்கு பாகிஸ்தான் பிரதமர் வார்னிங்!

பாகிஸ்தான், ஆக. 14–

பாகிஸ்தானின் பாதுகாப்பு, இறையாண்மை மற்றும் நீர் உரிமைகளுக்கு ஆபத்து நேர்ந்தால், மே 2025 இல் கொடுத்ததை விட பலமான பதிலடியை கொடுப்போம் என இந்தியாவிற்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியா ஆகஸ்ட் 15 (நாளை) சுதந்திர தினத்தை கொண்டாட உள்ளது போல, பாகிஸ்தான் இன்று (ஆகஸ்ட் 14) தனது சுதந்திர தினத்தை கொண்டாடுகிறது.

**நினைவிடம்**

கடந்த ஆண்டு ஏப்ரலில் பஹல்காமில் 26 பேர் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பதிலடியாக இந்தியா மே 7 அன்று ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் ராணுவ நடவடிக்கை மேற்கொண்டது. 2 நாட்கள் நீடித்த இந்த மோதல் மே 9 அன்று முடிவுக்கு வந்தது.

இந்நிலையில் நேற்று (ஆகஸ்ட் 13) தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடந்த ஆண்டு இந்தியாவுடன் நிகழ்ந்த மோதல் மற்றும் அதில் சண்டையிட்ட பாகிஸ்தான் வீரர்களுக்கான யாதிர் ஐ பதா (வெற்றி நினைவிடத்தை) திறந்து வைக்கும்



நிகழ்வில் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், அதிபர் ஆசிப் அலி ஜர்தாரி, பீல்டுக்கு மார்ஷல் அசிம் முனீர் மற்றும் முப்படை தளபதிகள் கலந்துகொண்டனர்.

**புகழாரம்**

இங்கு கடந்த ஆண்டு தாக்குதலின் புகைப்படங்கள் காட்சியப்படுத்தப்பட்டுள்ளன. மோதலில் பாகிஸ்தானே வென்றதாக அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பேசிய பிரதமர் ஷெரீப், "யாதிர் ஐ பதா என்பது நமது உறுதிப்பாடு, விடாமுயற்சி மற்றும் எதிரிகள் மீதான நமது ஆயுத படைகளின் ஆதிக்கத்தை பிரதிபலிக்கிறது. நாட்டை காக்கும் சண்டையில் உயிரிழந்த நமது வீரர்களுக்கும், நமது பெருமித்திதிற்குமான நினைவுச்சின்னம் இது " என்றார்.

**இந்தியாவுக்கு வார்னிங்**

"பாகிஸ்தான் அமைதியை விரும்புகிறது. ஆனால் அமைதியை விரும்புவதை பலவீனமாக எடுத்துக்கொள்ள கூடாது.

கண்ணியத்துடனும் உறுதியுடனும் நாம் அமைதியை நாடுகிறோம். இந்த பிராந்தியத்தில் பாகிஸ்தான் அமைதிக்கான உத்தரவாதமாக விளங்குகிறது. ஆனால் பாகிஸ்தானின் பாதுகாப்பு, இறையாண்மை மற்றும் நீர் உரிமைகளுக்கு ஆபத்து நேர்ந்தால், மே 2025 இல் கொடுத்ததை விட பலமான பதிலடியை கொடுப்போம்" என எச்சரித்துள்ளார்.

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தான் உடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்திய இந்தியா, ஜம்மு காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் செல்லும் நீரை கணிசமாக குறைத்துள்ளது.

இந்த நீரை விவசாயத்துக்கும், குடிநீர் தேவைக்கும் பாகிஸ்தான் பெருமளவில் நம்பியுள்ளதால், நீரை திறந்துவிடும்படி இந்தியாவுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து மிரட்டல் விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இது முதல் முறை அல்ல... நாடாளுமன்ற முடக்கத்தால் ரூ.175 கோடி வீணடிப்பு!

புதுடெல்லி, ஆக. 14–

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகளின் அமளியால் 7 ஆயிரம் நிமிடங்களுக்கு மேல் அவைகள் முடங்கின. இதன் காரணமாக ரூ.175 கோடி மக்கள் பணம் வீணாகி இருப்பதாக மதிப்பிடப்பட்டு உள்ளது.

**நாடாளுமன்றம்**

மக்கள் செலுத்தும் வரிப்பணத்திலேயே சட்டசபைகள் மற்றும் நாடாளுமன்றம் இயங்குகின்றன. இவை, சராசரி ஆண்டுக்கு 2 முறை கூட்டப்பட வேண்டும். ஆனால் நாடாளுமன்றம் பட்ஜெட் கூட்டத்தொடர், மழைக்கால கூட்டத்தொடர் மற்றும் குளிர்கால கூட்டத்தொடர் என ஆண்டுக்கு 3 முறை கூட்டப்பட்டு வருகிறது.

இந்த கூட்டத்தொடர்கள் முழுமையாக நடைபெற்றால் மக்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும். இடை இடையே முடங்குவதால் பயன் இல்லாமல் போவது மட்டுமின்றி, மக்களின் வரிப்பணமும் வீணாகும்.

**19 அமர்வுகள்**

அந்த வகையில் தற்போது நடந்து முடிந்த மழைக்கால கூட்டத்தொடர், மக்களின் பணம் வீணான வகையில் அமைந்தது. இந்த கூட்டத்தொடர் கடந்த மாதம் 20–ந் தேதி தொடங்கி



நேற்றுடன் நிறைவடைந்தது. இதில் மொத்தம் 19 அமர்வுகள் நடைபெற்றன.

**டெல்லி போராட்டம்**

ஆனால் கூட்டத்தொடர் தொடங்கிய நாளில் இருந்தே நீட் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை முன்னிறுத்தி எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வந்தன. கூட்டத்தொடரின் தொடக்க நாளில் டெல்லியில் போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது தடியடி நடத்தப்பட்ட விவகாரம் விஸ்வரூபம் எடுத்தது.

**அமித்ஷா**

அத்துடன் அயோத்தி ராமர் கோவில் நன்கொடை கையாடல் விவகாரமும் சேர்ந்தது. இதுபோன்ற எல்லா பிரச்சனைகளுக்கும் உள்துறை மந்திரி அமித்ஷாவிடம் எதிர்க்கட்சிகள் பொறுப்புக்கூறலை கேட்டன.

**நாடாளுமன்றம் முடக்கம்**

இந்த வகையில் நாள்தோறும் போராட்டமாக இருந்தது. ஒருநாள் கூட நாடாளுமன்றம் முழுமையாக நடைபெறவில்லை. ஒத்திவைப்புகளால் அடிக்கடி முடங்கியது. இதனால் கோடிக்கணக்கில் மக்களின் வரிப்பணம் வீணாகி விட்டதாக பலரும் பேசினர். இதுபற்றி ஒரு கணக்கீடு வந்துள்ளது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் செயல்பட ஒரு நிமிடத்துக்கு ரூ.26 லட்சம் செலவு ஆகும். இதன்படி ஒரு மணி நேரத்துக்கு ரூ.10 கோடி செலவிடப்படுகிறது. 6 மணிநேரம் கொண்ட ஒருநாள் அமர்வுக்கு ரூ.9 கோடி செலவாகும். தற்போதைய மழைக்கால கூட்டத்தொடரில் நாடாளுமன்ற அவைகள் 7 ஆயிரம் நிமிடங்களுக்கு மேல் முடங்கியிருப்பதாக தெரிகிறது. இதன் காரணமாக ரூ.175.6 கோடி மக்கள் பணம் விரயம் ஆகியிருப்பதாக கூறப்படுகிறது.

**எதிர்க்கட்சிகள் அமளி**

எதிர்க்கட்சிகளின் அமளியால் முழு கூட்டத்தொடரும் பாதிக்கப்பட்டு இருப்பது இது தான் முதல் முறை அல்ல. இதற்கு முந்தைய ஆட்சிகளிலும் இதுபோன்ற பாதிப்புகள் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சென்னை உயர் நீதிமன்ற சுதந்திர தின விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து இல்லை?

சென்னை, ஆக. 14–

சென்னை உயர் நீதிமன்றத்தில் நாளை சுதந்திர தின விழா கொண்டாட்டம் தொடர்பான சுற்றறிக்கையில் தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெறவில்லை என்பது பேசுபொருளாகியுள்ளது.

நாட்டின் சுதந்திர தினம் நாளை (ஆக. 15) கொண்டாடப்படுகிறது. அனைத்து அரசு அலுவலங்களிலும் விழா கொண்டாடுவதையொட்டி ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நாளை சுதந்திர தின விழா கொண்டாட்டம் குறித்து நீதிமன்ற பதிவாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், "வந்தே மாதரம் தேசியப் பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, மத்திய அரசு அறிவுறுத்தலின்படி, 'ஹர் கர் திரங்கா' (Har Ghar Tiranga) பிரசாரத்தின் கீழ் சென்னை உயர்நீதிமன்றம், மதுரை உயர்நீதிமன்ற அமர்வு, சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு மாநில நீதித்துறை அகாதெமி மையங்கள், மாவட்ட நீதித்துறை அலுவலகங்கள் மற்றும் புதுவையில் நடைபெறவுள்ள சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் வந்தே மாதரம் பாடல் முதலில் இசைக்கப்படும்.

இந்நிகழ்ச்சிகளில் முதலில் 'வந்தே மாதரம்' பாடல் பாடப்பட்டு, அதனைத் தொடர்ந்து தேசியக் கொடி ஏற்றப்பட்டு இறுதியாகத் தேசிய கீதம் இசைக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அரசு நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும் என சட்டப்பேரவையில் சமீபமாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கு முந்தையநாள் சென்னை உயர்நீதிமன்றத்துக்கு புதிதாக 15 நீதிபதிகள் பதவியேற்பு நிகழ்ச்சி, தமிழ்த்தாய் வாழ்த்து பாடி துவங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதுசார்ந்த அலுவலகங்களில் சுதந்திர தின விழா நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்து குறித்த தகவல் இல்லை என்பது பேசுபொருளாகியுள்ளது.

பின்னூட்டத்தில் வெளியாகும் கருத்துகளுக்கு அவற்றைப் பதிவிடுவோரே முழுப் பொறுப்பு; அவை தினமணியின் கருத்துகளைப் பிரதிபலிக்கவில்லை.தனிநபர், சமூகம், மதம் அல்லது நாடு ஆகியவற்றுக்கு எதிராக அவமதிக்கிற அல்லது ஆபாசமான விதத்திலுள்ள எந்தவொரு கருத்தும் இந்திய அரசின் தகவல் தொழில்நுட்பக் கொள்கைப்படி தண்டனைக்குரிய குற்றம். இதுபோன்ற கருத்துகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

# மக்களவைத் தலைவர் தேநீர் விருந்தில் பங்கேற்றதில் என்ன சர்ச்சை? கனிமொழி!

சென்னை, ஆக. 14–

மக்களவைத் தலைவர் அளித்த தேநீர் விருந்தில் பங்கேற்றதில் என்ன சர்ச்சை இருக்கிறது என்று திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நிறைவையொட்டி, மக்களவை எம்.பி.க்களுக்கு அவைத் தலைவர் ஓம் பிர்லா வியாழக்கிழமை தேநீர் விருந்து அளித்தார்.

இந்த விருந்தை எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணி புறக்கணித்த நிலையில், திமுக மட்டும் கலந்து கொண்டது விவாதத்துக்குள்ளானது.

இந்த நிலையில், இன்று காலை சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த கனிமொழி பேசியதாவது:

"மக்களவை தலைவர் அளித்த தேநீர்




விருந்தில் பங்கேற்றதில் என்ன சர்ச்சை இருக்கிறது. நாடாளுமன்றத்தில் திமுக எம்.பி.க்களின் இருக்கைகளை மாற்றுவது தொடர்பாக பேசுவதற்குதான் சென்றோம்.

இந்தியா கூட்டணியின் தற்போது திமுக விலகிவிட்டது. அந்த கூட்டணியில் காங்கிரஸ் மட்டும்தான் இருக்கிறது" எனத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுடன் பேசிய அமைச்சர் நிர்மல்குமார்,

"முன்பு மறைமுகமாக பாஜகவுடன் திமுக கூட்டணி அமைத்திருந்தது. தற்போது வெளிப்படையாக கூட்டணி அமைத்துள்ளது. ஆட்சியை இழந்த நிலையில், மக்களிடம் கொள்ளையடித்த பணத்தை பாதுகாக்க பாஜகவிடம் கொத்தடிமையாக சரணடைந்துவிட்டது.

தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிரான தீர்மானத்துக்கு திமுக ஆதரவு அளித்தது. ஆனால், நாடாளுமன்றத்தில் அந்த தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்க போவதாக ஒருமுறைகூட யாரும் கூறவில்லை. அவர்களின் குடும்ப சொத்துகளை பாதுகாத்துக் கொள்ள பாஜக காலில் விழுந்துவிட்டார்கள்" எனத் தெரிவித்தார்.



# 6 லக்னங்களுக்கு ராஜயோகம்!



ஜோதிடத்தில் ஒருவரது வாழ்க்கைப் பலன்களை கணிப்பதில் ராசியை விட லக்னத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒருவர் பிறக்கும் நேரத்தில் கிழக்கு திசையில் உதயமாகும் ராசியே லக்னம் எனப்படுகிறது. ஒருவரின் குணநலன்கள், வாழ்க்கை முன்னேற்றம், திருமணம், தொழில், செல்வம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை கணிப்பதில் லக்னம் முக்கிய பங்கு வகிப்பதாக ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

ஜோதிடத்தில் சில கிரகங்கள் குறிப்பிட்ட லக்னங்களுக்கு யோககாரக கிரகங்களாக செயல்படுகின்றன. ஒரு கிரகம் கேந்திரம் மற்றும் திரிகோண வீடுகளுக்கு அதிபதியாக அமைந்தால், அது அந்த லக்னத்திற்கு வலிமையான யோகங்களை வழங்கக்கூடியதாக கருதப்படுகிறது. அந்த வகையில் ரிஷபம், துலாம், கடகம், சிம்மம், மகரம், கும்பம் ஆகிய 6 லக்னங்கள் சிறப்பானவை என ஜோதிடத்தில் குறிப்பிடப்படுகிறது.

**ரிஷப லக்னம்**

ரிஷப லக்னத்தில் பிறந்தவர்களுக்கு சனி பகவான் 9–ம் மற்றும் 10–ம் வீடுகளுக்கு அதிபதியாகிறார். இதனால் சனி யோககாரக கிரகமாக கருதப்படுகிறார். சனி சாதகமான நிலையில் இருந்தால் தொழில், பதவி, அதிர்ஷ்டம் உள்ளிட்ட விஷயங்களில் முன்னேற்றம் கிடைக்கலாம்.

**துலாம் லக்னம்**

துலாம் லக்னத்திற்கு சனி 4–ம் மற்றும் 5–ம் வீடுகளுக்கு அதிபதியாகிறார். இதனால் கல்வி, சொத்து, பதவி, அறிவு மற்றும் வாழ்க்கை முன்னேற்றம் போன்றவற்றில் சனியின் நிலை முக்கியத்துவம் பெறுகிறது.

**கடக லக்னம்**

கடக லக்னத்தில் செவ்வாய் 5–ம் மற்றும் 10–ம் வீடுகளுக்கு அதிபதியாக இருப்பதால் யோககாரகனாக கருதப்படுகிறார். தொழில் மற்றும் வாழ்க்கை முன்னேற்றத்தில் செவ்வாயின் பலம் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது.

**சிம்ம லக்னம்**

சிம்ம லக்னத்திற்கு செவ்வாய் 4–ம் மற்றும் 9–ம் வீடுகளுக்கு அதிபதி. இதனால் வீடு, நிலம், வாகனம், அதிர்ஷ்டம் மற்றும் உயர்கல்வி போன்ற விஷயங்களில் யோகப் பலன்கள் கிடைக்க வாய்ப்புள்ளதாக ஜோதிடம் கூறுகிறது.

**மகர லக்னம்**

மகர லக்னத்தில் சுக்கிரன் 5–ம் மற்றும் 10–ம் வீடுகளுக்கு அதிபதியாக இருப்பதால் முக்கியமான யோககாரக கிரகமாக விளங்குகிறார். தொழில், பதவி, திறமை மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு இது சாதகமான அமைப்பாக கருதப்படுகிறது.

**கும்ப லக்னம்**

கும்ப லக்னத்திற்கு சுக்கிரன் 4–ம் மற்றும் 9–ம் வீடுகளுக்கு அதிபதியாகிறார். இதனால் சொத்து, வசதி, அதிர்ஷ்டம் மற்றும் வாழ்க்கையில் கிடைக்கும் வாய்ப்புகளில் சுக்கிரனின் நிலை முக்கியமானதாக கருதப்படுகிறது.

எனவே, இந்த 6 லக்னங்களில் பிறந்தவர்களுக்கு யோககாரக கிரகங்கள் ஜாதகத்தில் வலிமையாக அமைந்திருந்தால், வாழ்க்கையில் தொழில் வளர்ச்சி, செல்வம், சொத்து, பதவி மற்றும் எதிர்பாராத முன்னேற்றம் போன்ற பலன்கள் கிடைக்கக்கூடும் என ஜோதிட நம்பிக்கைகள் தெரிவிக்கின்றன. இருப்பினும் முழுமையான பலனை அறிய தனிப்பட்ட ஜாதகத்தில் கிரகங்களின் நிலை, பார்வை, தசா–புக்தி உள்ளிட்ட அம்சங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

# பிரதமர் வேட்பாளர் விஜய்யா? - அமைச்சர் ராஜேஷ்குமார் பரபரப்பு பதில்!



கோவை, ஆக. 14–

கோவையில் அமைச்சர் ராஜேஷ் குமார் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:–

தமிழகத்தில் இருந்து ஒருவர், பிரதமராக வரவேண்டும் என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளது குறித்து கேட்கிறீர்கள். அது அவர் நிலைப்பாடு. எங்களுடைய நிலைப்பாடு. நாங்கள் எதிர்பார்க்கும் தலைவர் ராகுல் காந்தி 2029–ல் பிரதமராக வருவார். அதில் எந்த சந்தேகமும் இல்லை.

பிரதமர் வேட்பாளராக த.வெ.க. விஜய்யை முன்னிறுத்த போகின்றார்களா என்று கேட்கும் உங்களது யூகத்துக்கு பதில் கூற முடி யாது. கூட்டணியுடன் இணைந்து மக்களுக்கான வளர்ச்சி திட்டங் களை செயல்படுத்தி வருகிறோம். 59 ஆண்டுகளுக்கு பின்பு ஆட்சியில் பங்கு வகிக்கிறோம்.

வாக்குச்சாவடி அளவில் கட் சியை பலப்படுத்தி வருகிறோம். உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு கைச்சின்னம் வெற்றி பெற நடவடிக்கை எடுப்போம். ராகுல் காந்தி தான் பிரதமர் வேட்பாளர் என்பதை த.வெ.க. நிச்சயமாக ஏற்றுக்கொள்ளும். இவ்வாறு அவர் கூறினார்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### சிறுநீரக கற்கள் வராமல் தடுக்க?



சிறுநீரகக் கற்கள் உருவாவதைத் தடுப்பதில் போதுமான அளவு தண்ணீர் குடிப்பது முக்கியப் பங்கு வகிக்கிறது. உடலில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் போது சிறுநீரில் உள்ள சில தாதுக்கள் அதிக செறிவுடன் சேர்ந்து கற்களாக உருவாகும் வாய்ப்பு அதிகரிக்கலாம்.

தினமும் போதுமான அளவு தண்ணீர் குடிப்பதால் சிறுநீர் நீர்த்துப் போகவும், சிறுநீரகத்தில் கற்களை உருவாக்கக்கூடிய தாதுக்கள் வெளியேறவும் உதவுகிறது. குறிப்பாக அதிக வெப்பம், உடற்பயிற்சி அல்லது அதிக வியர்வை ஏற்படும் நேரங்களில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக்கொள்வது அவசியம்.

முதுகு அல்லது இடுப்பு பகுதியில் கடுமையான வலி, சிறுநீர் கழிக்கும்போது வலி, சிறுநீரில் ரத்தம், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அலட்சியம் செய்யாமல் மருத்துவரை அணுக வேண்டும்.

சிறுநீரகக் கற்கள் ஏற்கனவே உள்ளவர்கள், தங்களுக்கு ஏற்ற தண்ணீர் அளவு மற்றும் உணவு முறையை மருத்துவரின் ஆலோசனையுடன் பின்பற்றுவது பாதுகாப்பானது.

# ஓலா, ஊபர், ரேபிடோவுக்கு கிடுக்கிப்பிடி!




புதுடெல்லி, ஆக. 14–

ஓலா, ஊபர், ரேபிடோ உள்ளிட்ட செயலிகளில் ஆட்டோ, கார், பைக் உள்ளிட்ட வாடகை வாகனங்களை முன்பதிவு செய்யும் பயணிகளிடம், பயணம் தொடங்குவதற்கு முன்பே 'Advance Tip' என்ற பெயரில் கூடுதல் தொகை கேட்கும் நடைமுறைக்கு மத்திய அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சில செயலிகளில் பயணக் கட்டணத்துடன் கூடுதலாக டிப்ஸ் வழங்கும் வசதி மட்டுமின்றி, "டிப்ஸ் வழங்கினால் ஓட்டுநர் பயணத்தை விரைவாக உறுதி செய்வார்", "கூடுதல் தொகை செலுத்தினால் பயணம் கிடைப்பதற்கான வாய்ப்பு அதிகம்" போன்ற வகையில் பயணிகளைத் தூண்டும் தகவல்கள் இடம்பெறுவதாக புகார்கள் எழுந்தன.

மேலும், சில நேரங்களில் செயலியில் காட்டப்படும் கட்டணத்தைவிட கூடுதலாக பணம் வழங்குமாறு ஓட்டுநர்கள் கேட்பதாகவும், பயணம் தொடங்குவதற்கு முன்பே டிப்ஸ் அல்லது கூடுதல் கட்டணம் செலுத்துமாறு வலியுறுத்தப்படுவதாகவும் பயணிகள் தரப்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இதையடுத்து, 'மோட்டார் வாகன ஒருங்கிணைப்பாளர் வழிகாட்டுதல்கள், 2025' (Motor Vehicle Aggregator Guidelines, 2025) அடிப்படையில் மத்திய அரசு முக்கியமான உத்தரவை பிறப்பித்துள்ளது.

**பயணியின் விருப்பம்!**

பயணிகளிடம் டிப்ஸ் கேட்பது கட்டாயமாகவோ, மறைமுகமாகவோ இருக்கக்கூடாது. பயணம் முடிந்த பிறகு, பயணி விரும்பினால் மட்டுமே டிப்ஸ் வழங்கும் வசதி இருக்க வேண்டும் என்று அரசு தெரிவித்துள்ளது.

பயணம் தொடங்குவதற்கு முன்போ அல்லது பயணம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதோ டிப்ஸ் கேட்கும் எந்தவொரு வசதியும் செயலிகளில் இடம்பெறக்கூடாது. அதேபோல், டிப்ஸ் வழங்கினால் விரைவாக வாகனம் கிடைக்கும் அல்லது ஓட்டுநர் பயணத்தை உறுதி செய்வார் என பயணிகளைத் தூண்டும் தகவல்கள், 'Add–on' உள்ளிட்ட கூடுதல் விருப்பங்களும் செயலியின் இடைமுகத்தில் இடம்பெறக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**டிப்ஸ் பிடித்தம் கூடாது!**

பயணி தனது விருப்பத்தின் அடிப்படையில் வழங்கும் டிப்ஸ் தொகை முழுமையாக ஓட்டுநருக்கே சென்றடைய வேண்டும். அதில் எந்தவிதமான பிடித்தமும் செய்யக்கூடாது என மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

இத்தகைய டிப்ஸ் நடைமுறைகள் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019–க்கு முரணானதாகவும், பயணிகளை தவறாக வழிநடத்தும் செயலாகவும் கருதப்படலாம் என அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, ஓலா, ஊபர், ரேபிடோ உள்ளிட்ட அனைத்து வாடகை வாகன செயலிகளும் தங்களது செயலிகளில் இதுபோன்ற வசதிகள் உள்ளதா என்பதை உடனடியாக மறுஆய்வு செய்து தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும்என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

வழிகாட்டுதல்களை பின்பற்றத் தவறும்நிறுவனங்களின்நடவடிக்கைகள் விதிமுறைகளுக்கு எதிரானதாக கருதப்படும்.இந்த புதியநடவடிக்கையின் முக்கிய நோக்கம், வாடகை வாகனக் கட்டணங்களில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்துவதும், பயணிகள் மீது தேவையற்ற கூடுதல் நிதிச்சுமை ஏற்படுவதைத் தடுப்பதுமாகும்.

# வேலை வாய்ப்பு

## இளைஞர்களுக்கு சூப்பர் வேலை வாய்ப்பு!

ASC Centre (South)ல் 62 மத்திய அரசு பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. MTS, Fireman, Leading Fireman, Fire Engine Driver, Tradesman Mate, Civilian Motor Driver, Cleaner, Cook உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பணியிட விவரங்கள்
மொத்த காலியிடங்கள்: 62
பணியிடங்கள்: MTS, Leading Fireman, Fireman, Fire Engine Driver, Tradesman Mate, Civilian Motor Driver (OG), Cleaner, Cook, Civilian Catering Instructor
பணி: மத்திய அரசு பணி
பணிநியமனம்: இந்தியா முழுவதும்
பணி வகை: நிரந்தர அடிப்படையில்
விண்ணப்ப முறை: அஞ்சல்/ஆஃப்லைன்
முக்கிய தேதிகள்
விண்ணப்பம் தொடக்கம்: 15.08.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 04.09.2026
Official Website: indianarmy.nic.in

SBI
பாரத ஸ்டேட் வங்கி
மத்திய பணியமர்த்தும் மற்றும் பதவி உயர்வுத் துறை
கார்பொரேட் மையம், மும்பை
தொலைபேசி: 022-22820427
மேலும் விவரங்களுக்கு ஸ்கேன் செய்யுங்கள்

**பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) (விற்பனை & வார்க்கையாளர் சேவை) எழுத்தர் பிரிவில் இளநிலை இணைப்பணியாளர்களை பணியமர்த்தல்**
SC/ST/OBC பிரிவினருக்கான திறப்பப்பட்டதத காரிப்பணியிடங்களை திறப்புவதற்கான சிறப்பு ஆட்சேர்ப்பு முகாம்

நிரந்தர அடிப்படையில் பாரத ஸ்டேட் வங்கியின் (விற்பனை & வாடிக்கையாளர் சேவை) இளநிலை இணைப்பணிகளுக்கு, இந்திய குடியுரிமை பெற்ற தகுதியுடையவர்கள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலி பணியிடங்களின் எண்ணிக்கை 1538**

விண்ணப்பங்களை சம்ாப்திக்கவேண்டிய இணையவழி, இணைப்பதற்கன கட்டணம் செலுத்துதல், தகுதி வரம்பு (வயது, கல்வித் தகுதி போன்ற பிற.), கட்டணங்கள் மற்றும் இதர விவரங்களை வங்கியின் https://sbi.bank.in/web/careers/current-openings என்ற இணையதளத்தில் Advertisement no. CRPD/CR/SPLDRIVE/2026-27/16 ஐத் தேர்வு செய்யவும். தகுதி வரம்பு போன்ற இதர விவரங்களை விளம்பரத்தின் மூலமாக சரிபார்த்த பின்னர், விண்ணப்பதாரர்கள் கட்டணத்தை செலுத்த அறிவுந்தத்ப்படுகின்றார்கள்.

- **கட்டணம் செலுத்துதல் & விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பிக்கும் தேதி: 07.08.2026 முதல் 27.08.2026 வரை.**

கேள்விகள் ஏதேனும் இருப்பின், வங்கியின் https://sbi.bank.in/web/careers/current-openings என்ற இணையதளத்தின் "CONTACT US" → "Post Your Query" என்ற இணைப்பின் மூலம் எங்களுக்கு எழுதி அனுப்பலாம்.

இடம்: மும்பை
தேதி: 07.08.2026
பொது மேலாளர்: (RP&PM)

# அரசு ஊழியர்களுக்கு 2028-ல் சம்பள உயர்வு?



புதுடெல்லி, ஆக. 14–

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வரும் 8–வது சம்பள கமிஷன் தொடர்பாக மத்திய அரசு முக்கிய தகவலை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது. இதனால் சம்பள உயர்வு எப்போது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புக்கு ஓரளவு தெளிவு கிடைத்துள்ளது.

பொதுவாக மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் சம்பளம், ஓய்வூதியம் உள்ளிட்டவற்றை மறுஆய்வு செய்வதற்காக 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை சம்பள கமிஷன் அமைக்கப்படுகிறது. அந்த வகையில், 8–வது சம்பள கமிஷன் 2025 நவம்பர் 3–ம் தேதி நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் அமைக்கப்பட்டது. இந்த கமிஷன், அரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 18 மாதங்களுக்குள் தனது பரிந்துரைகளை மத்திய அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும் என காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி, அதிகபட்சமாக 2027 மே மாதம் வரை கமிஷனுக்கு அவகாசம் உள்ளது. கமிஷன் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்கு முன்பாகவே அறிக்கையை தாக்கல் செய்யுமா என மாநிலங்களவை உறுப்பினர் நீரஜ் சேகர் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளித்த மத்திய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி, 18 மாதங்களுக்குள் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்தார். ஆனால், அதற்கு முன்பாக அறிக்கை தாக்கல் செய்யப்படும் என எந்த குறிப்பிட்ட தேதியும் உறுதி செய்யப்படவில்லை என்றும் கூறினார்.

மேலும், இதுவரை 8–வது சம்பள கமிஷன் எந்தவொரு பரிந்துரையையும் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கவில்லை என்றும் அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

தற்போது சம்பள கமிஷன் ஆலோசனை மற்றும் கருத்துக் கேட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளது. ஊழியர் அமைப்புகள், சங்கங்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடம் கருத்துகள் பெறப்பட்டு வருகின்றன. ஜெய்ப்பூர், சென்னை, புதுச்சேரி, சண்டிகர் உள்ளிட்ட நகரங்களிலும் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற உள்ளன.

**அப்படியானால் சம்பள உயர்வு எப்போது?**

2027 மே மாதத்திற்குள் கமிஷன் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதன் பின்னர் மத்திய அரசு பரிந்துரைகளை ஆய்வு செய்து அமல்படுத்தும் நடைமுறை தொடங்கும். இதனால் 2028 ஜனவரி முதல் புதிய சம்பளம் கிடைக்க வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், சம்பள உயர்வு அமல்படுத்தப்படும் தேதி பிந்தையதாக இருந்தாலும், அதற்குரிய முந்தைய காலத்திற்கான நிலுவைத் தொகை அரியர் வடிவில் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் 1 கோடி மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் எதிர்பார்த்து வரும் இந்த சம்பள உயர்வில், இறுதி முடிவு 8–வது சம்பள கமிஷன் பரிந்துரைகளுக்குப் பிறகே தெரியவரும்.

# விவசாயிகளுக்கு குட் நியூஸ்!




புதுடெல்லி, ஆக. 14–

பி.எம். கிசான் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6,000, தலா ரூ.2,000 வீதம் 3 தவணைகளாக வழங்கப்படுகிறது. 23–வது தவணை ஜூன் 20–ல் வழங்கப்பட்ட நிலையில், 24–வது தவணை அக்டோபரில் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதிகாரப்பூர்வ தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அடுத்த தவணை பணம் கிடைக்குமா என்பதை விவசாயிகள் Beneficiary Status மூலம் சரிபார்க்கலாம். மேலும், e–KYC கட்டாயம் என்பதால் அதை முடித்திருக்க வேண்டும்.

நில உரிமை மற்றும் குடும்ப உறுப்பினர்கள் இருவரும் பயனடைதல் உள்ளிட்ட விதிமீறல்கள் கண்டறியப்பட்டால், நிதி தற்காலிகமாக நிறுத்தப்படலாம்.

## சினிமா துளிகள்..!

### ரஜினி ரசிகர்களுக்கு செம அப்டேட்!




சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் 'தர்மன்: தி டெட்லி டாக்டர்' படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்த நிலையில், தற்போது 2–ம் கட்ட படப்பிடிப்பு தொடங்கியுள்ளது.

அஸ்வத் மாரிமுத்து இயக்கும் இப்படத்தை கமல்ஹாசன் தயாரிக்கிறார். ரஜினிகமல் கூட்டணி என்பதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.'தர்மன்' அடுத்த ஆண்டு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.. இந்த படத்தை முடித்த பின்பு ரஜினிகாந்த்–கமல் நடிக்க, நெல்சன் இயக்கும் படம் உருவாக இருக்கிறது.

அஸ்வத் மாரிமுத்து, ரஜினியின் திரைப்படத்தை இயக்கி முடித்த பிறகு, சிம்புவின் 51வது படத்தை இயக்குகிறார். இதற்காகவும் ரசிகர்கள் பெரிதாய் காத்துக்கொண்டுள்ளனர்.

### என்ன ஆச்சு? ஷகிலா!




அதிக நேரம் செல்போன் பயன்படுத்தியதால் கழுத்துப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாக நடிகை ஷகிலா தெரிவித்துள்ளார். ஒரே பக்கமாக படுத்துக்கொண்டு நீண்ட நேரம் செல்போனில் கேம் விளையாடியதாக கூறிய அவர், அதன் விளைவாக கழுத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கு சிகிச்சை மேற்கொண்டதாக விளக்கமளித்துள்ளார். "செல்போனை தேவையான அளவு மட்டுமே பயன்படுத்துங்கள். குழந்தைகளிடமும் அதிக நேரம் செல்போன் கொடுப்பதை தவிருங்கள்" என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செல்போன் பயன்பாட்டில் கவனம் தேவை என்பதை வலியுறுத்தும் வகையில் ஷகிலாவின் இந்த அனுபவம் தற்போது பேசுபொருளாகியுள்ளது.

# உங்கள் பெயரில் அரசு பேருந்து!



நட்டத்தில் இயங்கி வரும் கேரள அரசுப் போக்குவரத்துக் கழகத்தை மீட்க புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய பேருந்துகள் வாங்க முடியாத நிதி நெருக்கடியில் உள்ள போக்குவரத்துக் கழகத்திற்கு, கோழிக்கோடு நகரச் சேவை கூட்டுறவு வங்கி ரூ.40 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளது. இதைத் தொடர்ந்து, 100–க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும் பேருந்துகள் வாங்க நிதியுதவி வழங்க முன்வந்துள்ளன.

இதன் மூலம் சுமார் ரூ.800 கோடி செலவில் 2,000 புதிய பேருந்துகளை வாங்க கேரள அரசு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதில் முக்கியமான புதிய முயறியாக, ஒருவர் ரூ.40 லட்சம் செலுத்தி பேருந்து வாங்குவதற்கு நிதியளித்தால், அந்த பேருந்தில் அவருடைய பெயர் மற்றும் புகைப்படத்துடன் பேருந்தை இயக்க அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மகளிருக்கான இலவசப் பயணத் திட்டத்தால் ஆண்டுக்கு சுமார் ரூ.800 கோடி இழப்பு ஏற்படுவதாகக் கூறப்படும் நிலையில், விளம்பர வருவாய் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் வருவாயை அதிகரிக்க அரசு முயற்சி செய்து வருகிறது.

# திருப்பூர் ரேவதி மருத்துவமனையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை அறிமுகம்!



திருப்பூர், ஆக. 14–

திருப்பூர் அவினாசி சாலையில் அமைந்துள்ள ரேவதி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் தற்போது புதியதாக அறிமுகபடுத்தப்படட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள மத்தியமாநில அரசாங்கத்தினால் அதிகாரப்பூர்வ அனுமதி பெற்றுள்ளது. தொடர்ந்து இம் மருத்துவமனையில் வெற்றிகரமான சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், சமீபத்தில் மிகவும் நுணுக்கமான மற்றும் சவாலான சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை ஒன்று வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு, நோயாளியின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது. இந்த வெற்றிகரமான சிகிச்சை குறித்தும், அதன் மருத்துவ நுணுக்கங்கள் மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையின் முக்கியத்துவம் குறித்தும், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்கள், மயக்கவியல் நிபுணர்கள் ஆகியவர்களோடு ரேவதி மெடிக்கல் சென்டர் தலைவர் டாக்டர். ஈஸ்வ ரமூர்த்தி செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்தனர்.



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# சுதந்திர தினத்தில் தேசிய கொடியேற்றும் முன் வந்தே மாதரம் பாடப்பட வேண்டும்! ஐகோர்ட்டு!!




சென்னை, ஆக. 14–

சுதந்திர தினத்தை முன்னிட்டு, தேசிய கொடி யேற்றும் முன் வந்தே மாதரம் பாடப்பட வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம், மதுரை அமர்வு மற்றும் கீழமை நீதிமன்றங்களுக்கு ஐகோர்ட்டு பதிவுத்துறை அறிவுறுத்தியுள்ளது.

அரசு நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும் என சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கு முந்தையநாள் சென்னை ஐகோர்ட்டில் புதிதாக 15 நீதிபதிகள் பதவியேற்பு நிகழ்ச்சி, தமிழ்த்தாய் வாழ்த்து பாடி துவங்கப்பட்டது. சுதந்திர தின விழாவின்போது, தேசியக் கொடியை ஏற்றுவதற்கு முன் வந்தே மாதரம் பாடல் பாடப்பட வேண்டும் எனவும், தேசியக் கொடி ஏற்றிய பின் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் எனவும், உயர்நீதி மன்றம், மதுரை அமர்வு, கீழமை நீதிம ன்றங்களுக்கு ஐகோர்ட்டு பதிவுத்துறை அறிவுறுத்தல் அனுப்பியுள்ளது. வந்தே மாதரம் பாடலின் 150–வது ஆண்டை முன்னிட்டு, மத்திய அரசின் அறிவுரைப்படி இந்த உத்தரவு பிறப்பிக்க ப்பட்டுள்ளதாக ஐகோ ர்ட்டு தலைமைப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

# அதிரடியாக குறைந்த தங்கம் விலை..!



சென்னை, ஆக. 14–

தங்கம் விலை அதிரடியாக குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.1,440 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,12,320–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.180 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,040–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலையை போல, வெள்ளி விலையும் குறைந்துள்ளது. அதன்படி வெள்ளி கிராமுக்கு ரூ.5–ம், கிலோவுக்கு ரூ.5 ஆயிரமும் குறைந்து ஒரு கிராம் ரூ.255–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.



மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், தாணிப்பாறையில் சதுரகிரிமலை அரு ள்மிகு சுந்தரமகாலிங்கம் சுவாமி திருக்கோயில் ஆடி அமாவாசை திருவிழாவை முன்னிட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் தமிழ்நாடு அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு விளக்கும் சிறப்பு புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



# இன்றைய கார்ட்டூன்

## வெளியுறவுக் கொள்கையில் சமநிலை




# ரூ.5 கோடியில் புதிய அலுவலகம்..! முதலமைச்சர் விஜய்க்காக!



சென்னை, ஆக. 14–

புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் உள்ள தலைமை செயலக கட்டிடத்தில் முதலமைச்சர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், நிர்வாக வசதியைக் கருத்தில் கொண்டு, முதல்–அமைச்சர் அலுவலகத்தை நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10–வது தளத்தில் மற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இந்த புதிய திட்டத்தின் கீழ் முதலமைச்சருக்கான பிரத்யேக அறை, அதிகாரிகள் மற்றும் ஆலோசகர்களுக்கான பணியிடங்கள், கூட்ட அரங்குகள், வருகையாளர் காத்திருப்பு பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

பணிகளை விரைவாக நிறைவு செய்யும் நோக்கில் கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு பொதுப்பணித்துறை சார்பில் சுமார் ரூ.5 கோடி மதிப்பிலான பணிகளுக்கு டெண்டர்கள் கோரப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

புதிய அலுவலகம் அமைக்கும் நடவடிக்கை அரசியல் மற்றும் நிர்வாக வட்டாரங்களில் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், பணிகள் நிறைவடைந்த பிறகு முதலமைச்சர் அலுவலகம் அங்கு செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வழக்குகளில் இருந்து தப்பிக்க பாஜகவுடன் திமுக மறைமுக கூட்டணி- அமைச்சர் நிர்மல் குமார்!



சென்னை, ஆக. 14–

பிரச்சனை வரும்போதெல்லாம் திமுகவினர் கூச்சமே இல்லாமல் டெல்லியில் சென்று காலில் விழுவார்கள் என்று அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நிர்மல் குமார் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:– வழக்குகளில் இருந்து வெளிவருவதற்காக பாஜகவுடன் நேரடியாக கூட்டணி வைக்க திமுக முயற்சி செய்தது.

சொத்துக்களை குடும்பத்தை காப்பதற்காக நேரடியாக கூட்டணி வைக்க திமுக முயன்றது. தொகுதி மறுவரையறை குறித்த வாக்கெடுப்பின்போது, அதற்கு எதிராக வாக்களிப்பார்களா இல்லையா என திமுக இப்போதுவரைா சொல்லவில்லை.

அனைத்திற்கும் ஆதாரம் உள்ளதால், கொஞ்ச நாள் காலம் தள்ளிபோகலாம் ஆனால் வழக்குகளில் இருந்து தப்பிக்க முடியாது.

கட்சி நிதி எல்லாமே அரசுக்கான நிதியாக மாறியுள்ளதால் ரூ.15,000 கோடி வருவாய்.

தேநீர் விருந்துக்கு செல்லவில்லை என கனிமொழி கூறுவது நம்பும்படியாக இல்லை. தேநீர் விருந்து நடைபெறும் என கனிமொழிக்கு தெரியாமலா அங்கு சொன்றார்? சீட் மாற்றம் குறித்து அந்த நாளில் தான் பேசவேண்டுமா?

பிரச்சனை வரும்போதெல்லாம் திமுகவினர் கூச்சமே இல்லாமல் டெல்லியில் சென்று காலில் விழுவார்கள்.

கடந்த ஆட்சியில் அரசுடன் பிரந்துணர்வு ஒப்பந்தம் நடந்தாலும் அதற்கு பின் குடும்பத்தினருடன் ஒர ஒப்பந்தம். நாளை நடைபெற உள்ள தேநீர் விருந்தில் கலந்து கொள்வது குறித்த தற்போது வரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

கோவையில் மாணவன் கொலை வழக்கில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாணவர்கள் இடையே ஏற்பட்ட தகராறில் தான் கொல்லப்பட்டுள்ளார். கோவை மாணவர், கைது நடவடிக்கை தொடர்கிறது. தவறு எங்கு நடந்தாலும் அதற்கு யார் காரணமாக இருந்தாலும் தவெக ஆட்சியில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகத்தில் எங்குமே சொத்து வரி உயர்த்தப்படவில்லை, சொத்து வரியை முறைப்படுத்தி உள்ளோம். திமுக ஆட்சியில் சென்னையில் பெரிய குடியிருப்புகளிலும் சொத்துவரி முறைப்படுத்தப்படாமல் முறைகேடு நடந்துள்ளது.

மதுரையில் சொத்த வரி முறைகேடு செய்யப்பட்டது. திமுக மேயர் கணவர் கைது செய்யப்பட்டார்.

தவெக அரசு யாருடன் பேசினாலும் வெளிப்படையாகதான் இருக்கும். மக்கள் நலனுக்காக மட்டுமே மத்திய அரசுடன் பேசுவோம்.

திருச்சி சிவா மத்திய அமைச்சர் ஆக உள்ளதாக கூறப்படுவதை திமுக தற்போது வரை மறுக்கவில்லை.

தன்னுடன் எத்தனை பேர் நிற்கிறார்கள் என காண்பிக்கவே எடப்பாடி பழனிசாமி போராட்டம் நடத்துகிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# காவிரி விவகாரத்தை கண்டித்து அதிமுக மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்!



தஞ்சாவூர், ஆக. 14–

பயிர்க்கடன் தள்ளுபடி, மேகதாது அணை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அதிமுக சார்பில் மாநிலம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்து. அப்போது அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:–

காவிரியில் நமக்குரிய நீரை பெற்றுத் தராத தவெக அரசு ரீல்ஸ் போடுவதில் மட்டும் கவனம் செலுத்தி வருகிறது.

ரீல்ஸ் மட்டும் போட்டு வரும் தவெக அரசானது விவசாயிகள் மற்றும் மக்கள் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கவில்லை. ரீல்ஸ் போடுவதும் ரீல் விடுவதும் தமிழக வெற்றிக்கழக அரசின் வேலையாக உள்ளது.

விவசாயிகளுக்கான மும்முனை மின்சாரத்தை முறையாக வழங்காததால் ஒரு லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் வறண்டு கிடக்கின்றன.

தலைமைச் செயலகத்தில் தனக்கான அறை மாற்றம் தான் முதலமைச்சர் விஜய்க்கு முக்கியம். மக்கள் முக்கியமில்லை.

நானும் அங்கு இருந்தேன், முன்னாள் முதலமைச்சர் ஸ்டாலினும் அங்குதான் இருந்தார். ஆனால் தற்போதைய முதல்வர் அறை மாற்றுகிறார்.

நடிகர் என்பதால் அறை நவீனமயமாக இருக்க வேண்டும் என எதிர்பார்த்து முதலமைச்சர் விஜய் அறையை மாற்றுகிறார்கள்.

விவசாயிகள் உணவுக்கே வழியின்றி உள்ள நேரத்தில் முதலமைச்சர் விஜய்க்கு அறை மாற்றம்தான் முக்கியமா?

நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக செயல்படும் கர்நாடக அரசு, முதலமைச்சர் விஜய் சென்று பேசினால் நீர் திறக்கும் என்பது நகைச்சுவை. 50 ஆண்டுகாலமாக காவிரி விவகாரத்தில் போராடிக் கொண்டிருக்கிறோம். அந்த வரலாறு தெரியாமல் தவெக அரசு செயல்படுகிறது.

போராடி, வாதாடி பெற்ற உச்சநீதிமன்ற தீர்ப்பையே கர்நாடகா மதிப்பதில்லை. பேச்சுவார்த்தை நடத்தினால் நீர் திறப்பார்களா?

வேண்டுமென்று காலம் தாழ்த்துவதற்காகவே கர்நாடகா சென்று பேச்சுவார்த்தை நடத்த முதலமைச்சர் விஜய் முயற்சிக்கிறார்.

விவசாயக் கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாவிட்டால் தவெக அரசுக்கு விவசாயிகள் தக்க பதிலடி கொடுப்பார்கள்.

கட்சி தொடங்கி மூன்று ஆண்டுகளே ஆகும் நிலையில் தவெகவுக்கு காவிரி போராட்ட வரலாறு எல்லாம் தெரிய வாய்ப்பில்லை. கூட்டணியில் கட்சிகள் கூட அனைத்து கட்சி கூட்டம் கூட்டுமாறு வலியுறுத்தியும் தவெக அரசு கேட்கவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# இங்கிலாந்தில் தடம் புரண்டு விபத்துக்குள்ளான பயணிகள் ரெயில்!



இங்கிலாந்து, ஆக. 14–

தெற்கு இங்கிலாந்தின் லூயிஸ் நகருக்கு அருகே நடந்த இந்த விபத்தில் ரெயிலின் 3 பெட்டிகள் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.

உள்ளூர் நேரப்படி பிற்பகல் 3:54 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மொத்தம் 150 பயணிகளை ஏற்றிக்கொண்டு ரெயிலானது லண்டனின் விக்டோரியா நிலையத்திலிருந்து ஈஸ்ட்போர்ன் நோக்கி சென்று கொண்டிருந்தது.

லூயிஸ் நகருக்கு வெளியே ரெயில் அதிவேகமாகச் சென்றபோது திடீரெனக் குலுங்கி தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. இதில் 3 பெட்டிகள் கவிழ்ந்தன.

சம்பவ இடத்திற்கு ஹெலிகாப்டர்கள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் உடனடியாக அனுப்பப்பட்டு மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கவிழ்ந்த பெட்டிகளுக்குள் சிக்கியுள்ள பயணிகளை மீட்கும் நடவடிக்கைகளில் மீட்பு படையினர் ஈடுபட்டனர். மீட்கப்பட்ட 11 பேரில் இருவருக்கு லேசான காயங்களும், 2 பேருக்கு பலத்த காயமும், 9 பேருக்கு லேசான காயங்களும் ஏற்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

சுமார் 3 மணி நேரத்திற்குள் ரெயிலில் இருந்த பயணிகள் அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது. இந்த விபத்தைத் தொடர்ந்து, லூயிஸ் மற்றும் ஈஸ்ட்போர்ன் உள்ளிட்ட முக்கியப் பாதைகளில் இயக்கப்படும் ரெயில் சேவைகள் முற்றிலும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

விபத்துக்கான முதன்மை காரணம் என்ன என்பது குறித்து போக்குவரத்துத் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளில் 11 மதுபான வகைகளை விற்கத் தடை!




சென்னை, ஆக. 14–

டாஸ்மாக் கடைகளில் 10 பிராந்தி வகைகள், ஒரு ரம் வகை விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. செயற்கை சுவையூட்டிகள் சேர்க்கப்பட்டது இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் சோதனையில் உறுதியான நிலையில் என்ரிகா நிறுவனத்தின் 11 வகை மதுபானங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மறுஉத்தரவு வரும் வரை கடைகளில் விற்பனை செய்யக்கூடாது என உத்தரவிட்டுள்ளது. மேலும் இத்தயாரிப்புகளின் விற்பனையை நிறுத்துமாறும், தயாரிப்புகளை நுகர்வோருக்கு விற்பனை செய்யக்கூடாது என்று விநியோகஸ்தர்கள்/ மொத்த விற்பனையாளர்கள்/ சில்லறை விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

என்ரிகா எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட்டின் மேற்கூறிய 11 வகை மதுபானங்களை குடோனிலிருந்து சில்லறை விற்பனைக் கடைகளுக்கு இடமாற்றம் செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் FL2 மற்றும் FL3 உரிமம் பெற்றவர்களுக்கு விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

**தடை செய்யப்பட்ட மதுபானங்கள்:–**

1.VSOP EXSHAW GOLD BRANDY
2.LOUIS VERNANT XO BLENDED PREMIUM BRANDY
3.Mc Dowells VSOP Brandy (Blended Brandy)
4.NO.1 McDowells Fine Brandy (Indian Brandy)
5.MENSCLUB Deluxe Brandy (Indian Brandy)
6.HONEY BEE FINE Brandy (Indian Brandy)
7.ENRICA VSOP SE–LECT BRANDY
8. ENRICA PLATINUM RESERVE XO BRANDY
9.ENRICA PREMIUM FRENCH BRANDY
10.VEERAN SPECIAL BRANDY
11.ENRICA OLD INDIE CLASSIC DARK RUM

# ஆம்புலன்ஸுக்கு 10 நிமிட கெடு!



சென்னை, ஆக. 14–

தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்து நடந்த இடத்துக்கு 10 கி.மீ. சுற்றளவுக்குள் உள்ள ஆம்புலன்ஸ், அவசரத் தகவல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 10 நிமிடங்களுக்குள் சம்பவ இடத்தை அடைய வேண்டும் என தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) புதிய விதிமுறையை அமல்படுத்தியுள்ளது.

மேலும், விபத்தில் சிக்கியவர்களை ஒரு மணி நேரத்திற்குள் அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். காலதாமதம் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட ஆம்புலன்ஸ் சேவை நிறுவனத்துக்கு ரூ.10,000 அபராதம்விதிக்கப்படும். GPS மூலம் ஆம்புலன்ஸ்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும்.

விபத்தில் சிக்கியவர்களின் உயிரைக் காக்கும் 'தங்க நேரத்தை' வீணாக்காமல் விரைந்து செயல்படுவதே இதன் முக்கிய நோக்கம்.



மதுரை மாவட்டம், கலைஞர் நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் கனரா வங்கி சார்பில் கனரா வித்யா ஜோதி கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகைக்கான காசோலையை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா வழங்கினார்.

## ஆகஸ்ட் 22ம் தேதி சென்னை அண்ணா அறிவாலயத்தில்

# திமுக செயற்குழு கூட்டம் நடைபெறும்: பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு




சென்னை, ஆக. 14–

ஆகஸ்ட் 22ம் தேதி காலை 10 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக செயற்குழு கூட்டம் நடைபெறும் என பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார். திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெறும். கட்சியின் ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்க திமுக செயற்குழு கூடுகிறது .




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020